முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.

1. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(அ) தேசிய ஒருமைப்பாடு தின உறுதிமொழி—பேரவை சிறிது நேரம் ஒத்திவைக்கப்பெறுதல்-தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தேசிய ஒருமைப்பாடு தினத்தையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று காலை 11-00 மணிக்கு தலைமைச் செயலக பிரதான கட்டடத்திற்கு அருகேயுள்ள இராணுவ அணிவகுப்பு மைதானத்தில் உறுதிமொழி செய்து வைக்க ஏதுவாக பேரவை தற்போது ஒத்திவைக்கப்படுகின்றது.

பேரவை மீண்டும் முற்பகல் 11-15 மணிக்குக் கூடி எஞ்சிய அலுவல்களை மேற்கொள்ளும்.

பின்னர், பேரவை முற்பகல் 10-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

முற்பகல் 11-15 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

3. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிறப்புக் கவன ஈர்ப்பு. காவிரி டெல்டா பகுதிகளில் கால்வாய்களைத் தூர் வாராததால்...

திரு. ஜி.கே. மணி: முக்கியமான பிரச்சினை குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: ஒத்திவைப்புத் தீர்மானம் குறித்து...

திரு. மு.பெ. சாமிநாதன்: கவன ஈர்ப்பு அறிவிப்புக் கொடுத்திருக்கிறேன்.

2004 நவம்பர் 19] [பேரவைத் தலைவர்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை. ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படுகின்றது. (குறுக்கீடுகள்) ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. இன்றைக்கே மூன்று சிறப்புக் கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். இரண்டு கவன ஈர்ப்புகளை எடுத்துக்கொள்கிறோம். (குறுக்கீடுகள்) மற்றவை எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) காவிரி டெல்டா பகுதிகளில்...

(ஆ) திருப்பூர் சாயப்பட்டறை கழிவுநீர், நொய்யல் ஒரத்துப்பாளையத்தில் கலப்பதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு

திரு. மு.பெ. சாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு அறிவிப்பு குறித்து...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏற்கெனவே அறையிலே சொன்னீர்கள். (குறுக்கீடு) திரு. சாமிநாதன், ஏற்கெனவே என்னுடைய அறையிலே சொன்னீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்வில் இருக்கிறது. நான் என்ன என்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்புதான் எடுத்துக்கொள்ளப்படுகிறது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக்கொள்ளப்படுகிறது. மற்றைய தீர்மானங்கள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. சாமிநாதன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் திரு. சாமிநாதன். (குறுக்கீடுகள்) என்ன, திரு. துரைமுருகன், என்ன பிரச்சினை? (குறுக்கீடுகள்) உட்காருங்கள். உட்காருங்கள்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சாமிநாதன் அவர்கள் கொடுத்திருக்கிற கவன ஈர்ப்பு அறிவிப்பினை இன்றைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கருதுகிறார். ஏனென்று கேட்டால், அதில் ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. நொய்யல், ஒரத்துப்பாளையத்தில் காவிரியினுடைய உப நதி ஒன்று, அதில் அணை கட்டியிருக்கிறார்கள். திருப்பூரிலிருந்து, இந்த சாயப்பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற நீரும்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இல்லை. (குறுக்கீடு) எடுத்துக்கொண்ட பிறகு நீங்கள் விளக்குங்கள்.

திரு. துரைமுருகன்: இல்லை. சொல்லிவிடுகிறேன். இந்த நீரெல்லாம் அங்கே தேங்குகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதும் முக்கியமான சிறப்புக் கவன ஈர்ப்புகள்தான்.

திரு. துரைமுருகன்: சாயப்பட்டறை தண்ணீரெல்லாம் நொய்யல், ஒரத்துப்பாளையத்தில் தேங்குகிற காரணத்தால், அதை காவிரியில் விடுகிறபோது, குடிக்கவும் முடியாது. பாமர மக்களுக்கு, விவசாயத்திற்கு, பயிருக்கு பயன்படாது. ஆகையினாலே அதை எதிர்த்து, இன்றைக்கு எல்லாக் கட்சிகள் சார்பிலும், ஆயிரக்கணக்கானோர் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று உண்ணாவிரதம் இருக்கிறார்கள். ஏனென்றால் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடுத்த..

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதை எடுத்ததற்குப் பிறகு அதைப்பற்றிப் பேசலாம். (குறுக்கிடு) எடுத்ததற்குப் பிறகு பேசலாம். இன்றைக்கு எடுப்பதும் முக்கியமான தீர்மானம்.

திரு. துரைமுருகன்: உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பை அமல்படுத்தும்படி கேட்கிறார்கள். எனவே, இன்றைக்கு அதை எடுத்தால்தான் அந்தப் பகுதியிலே இருக்கிற எம்.எல்.ஏ. இங்கே பேசியதாக இருக்கும். இன்றைக்கு உண்ணாவிரதம் இருந்து நாளைக்கு எடுத்தால் குதிரை போனதற்குப் பிறகு லாயத்தை பூட்டுவது போல் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) திங்கட்கிழமை எடுத்துக்கொள்ள முடியுமா என்று யோசிக்கிறேன். (குறுக்கீடுகள்) திங்கட்கிழமை எடுத்துக்கொள்ள முடியுமா என்று பார்க்கிறேன். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. நீங்கள் உடனடியாக அப்படிக் கேட்கக் கூடாது. (குறுக்கீடுகள்) அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உடனடியாக அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்கக் கூடாது.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நிலுவையில் உள்ளது. இந்த நேரத்தில் அதுகுறித்து அவையில் விவாதிப்பது முறையாக இருக்காது என்று நான் கருதுகிறேன். உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பிற்குப் பிறகுதான் எந்த நடவடிக்கையும் எடுக்க முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் எழுப்பிய பிரச்சினைக்கு நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லிவிட்டார்கள். அந்தக் கவன ஈர்ப்பு முடிந்தது.